# பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர் தகவல்கள்

## மீள்பார்வை

- தென் கரோலினா கல்லூரி மற்றும் பணிவாழ்க்கைத் தயார்நிலை மதிப்பீடு (SC READY) திட்டம் என்பது 3 முதல் 8ஆம் வகுப்புகளுக்கான ஆங்கில மொழிக் கலை (ELA), கணிதம் மற்றும் 4 மற்றும் 6ஆம் வகுப்புக்கான அறிவியலில் நடத்தப்படும் மாநிலம் தழுவிய மதிப்பீடாகும். SC READY தேர்வுகள் ELA, கணிதம் மற்றும் அறிவியல் வகுப்புகளில் கற்பிக்கப்படும் தென் கரோலினாக் கல்லூரி மற்றும் பணிவாழ்க்கைத் தயார்நிலைத் தரநிலைகளை அளவிடுகின்றன. இந்தத் தரநிலைகள் SCDE இணையதளத்தில் உள்ளன: **https://ed.sc.gov/instruction/standards-learning/**
- அவர்களது IEP குழுவால் முடிவு செய்யப்பட்டபடி, தென் கரோலினா மாற்று மதிப்பீட்டிற்கு (SC-Alt) தகுதி பெறும் மாணவர்களைத் தவிர, குறைபாடுகள் உள்ள மாணவர்கள் மற்றும் பன்மொழி கற்பவர்கள் (MLs) உட்பட அனைத்து மாணவர்களுக்கும் SC READY நடத்தப்பட வேண்டும்.

## தேர்வு காலக்கெடு

- SC READY மதிப்பீடு ஆனது, ஒவ்வொரு மாவட்டத்தின் அறிவுறுத்தல் காலெண்டரால் தீர்மானிக்கப்படுகிறவாறு **கடைசி இருபது பள்ளி நாட்களில் நடத்தப்பட வேண்டும்**. மாவட்டங்கள் மற்றும் பள்ளிகள் குறிப்பிட்ட தேர்வுத் தேதிகளைத் திட்டமிட்டு, இந்தத் தேதிகளைத் தங்கள் இணையத் தளங்களில் வெளியிடும்..
- தென் கரோலினாவின் “வெற்றி பெறப் படியுங்கள்” சட்டத்தின்படி கோடைக்கால வாசிப்பு முகாமிற்கு மாணவர்கள் வருகை புரிவதைத் தீர்மானிப்பதற்கு மாணவர் தேர்வு மதிப்பெண்களைப் பெற, தேர்வுச் சாளரத்தின் **முதல் ஐந்து நாட்களில் மாவட்டங்கள் மூன்றாம் வகுப்பிற்கான ELA வாசிப்பு மதிப்பீடுகளைத்** திட்டமிட வேண்டும் என்று SCDE கோருகிறது.

## தேர்வு நடத்துதல்

- SC READY தேர்வுகளுக்குக் கால வரம்பு கிடையாது. இருப்பினும், மாணவர்கள் ஒவ்வொரு தேர்வையும் வழக்கமான பள்ளி நாள் முடிவதற்குள் முடிக்க வேண்டும்.
- 3 முதல் 5 வகுப்புகளுக்கான ELA தேர்வு 3-பகுதித் தேர்வாகக் கட்டமைக்கப்படும். இந்தப் பகுதிகள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளன: பகுதி A எழுதுதல், படித்தல் மற்றும் பகுதி B படித்தல். அனைத்து வாசிப்புப் பிரிவுகளும் ஒரே பள்ளி வாரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். 6 முதல் 8ஆம் வகுப்புகளில் உள்ள ELA தேர்வு அசல் இரண்டு நாள் தேர்வு வடிவத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும். மதிப்பீடு இரண்டு நாட்களில் மேற்கொள்ளப்படும், ஒவ்வொரு பிரிவும் தனித்தனி நாட்களில் மேற்கொள்ளப்படும்: எழுதுதல் மற்றும் படித்தல்.
- வசந்த காலம் 2026க்கான 3 முதல் 5ஆம் வகுப்புகளுக்கான கணிதத் தேர்வு இரண்டு நாள் தேர்வாக இருக்கும். கணிதத் தேர்வின் இரண்டு பிரிவுகளும் ஒரே பள்ளி வாரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். 6 முதல் 8ஆம் வகுப்புகளுக்கான கணிதத் தேர்வுப் பிரிவில் திருத்தப்பட்ட ஒரு வரிசை இருக்கும். “கணக்கிடும் கருவியைப் பயன்படுத்தக் கூடாது” என்கிற பிரிவு முதலில் மேற்கொள்ளப்படும், அதைத் தொடர்ந்து “கணக்கிடும் கருவியைப் பயன்படுத்தலாம்” பிரிவு, ஒரு நாள் தேர்வாக மேற்கொள்ளப்படும்.

## தேர்வு வடிவம்

- SC READY மதிப்பீடுகள் கணினி அடிப்படையிலான வடிவத்தில் பிரத்தியேகமாக மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும், அவர்களின் IEP, 504 திட்டம் அல்லது ILAP (பன்மொழி கற்பவர்களுக்கு) இல் ஆவணப்படுத்தப்பட்டுள்ளபடி, இணைய மதிப்பீடுகளில் பங்கேற்பதைத் தடுக்கும் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்குக் காகித தேர்வு வசதிகள் கிடைக்கின்றன.

## மொழிபெயர்ப்புகள்/அணுகும் வசதி

- இந்தச் சிறு புத்தகம், மாதிரி மதிப்பெண் அறிக்கைகள் மற்றும் எழுத்தாளரின் சரிபார்ப்புப் பட்டியல் உள்ளிட்ட பெற்றோர் வளங்கள் பல மொழிகளிலும் அணுகக்கூடிய வடிவத்திலும் கிடைக்கின்றன. மொழிபெயர்ப்புகளுக்கு, பெரிய அச்சு வடிவிலான ஆவணங்களுக்கு மற்றும் பிற மாற்று வடிவங்களைக் கோருவதற்கு, மாணவர் மற்றும் பெற்றோர் வளங்கள் வலைப்பக்கத்திற்குச் செல்லவும்: **https://ed.sc.gov/tests/assessment-information/student-and-parent-resources/**

## தேர்வுக் கேள்விகளின் வகைகள்

- ELA, கணிதம் மற்றும் அறிவியல் தேர்வுகள் பல்வேறு கடினமான வடிவங்களைக் கொண்ட தேர்வுக் கேள்விகளைக் கொண்டுள்ளன.
- ELA தேர்வில், 3–8 ஆம் வகுப்புகளுக்கு பதிலைத் தேர்வுச் செய்யக்கூடிய (SR) கேள்விகள், 4–8 ஆம் வகுப்புகளுக்கு தொழில்நுட்பம் சார்ந்த பதில்களைத் (TE) தேர்வு செய்யக்கூடிய கேள்விகள் மற்றும் 5–8 ஆம் வகுப்புகளுக்கு சான்று- அடிப்படையில் பதிலைத் தேர்வு செய்யக்கூடிய (EBSR) கேள்விகள் இடம்பெற்றிருக்கும். ELA தேர்வில் உரைச் சார்ந்த எழுத்து (TDW) கேள்வியும் அடங்கும். மாணவர்கள் தங்கள் எழுதப்பட்ட பதில்களுக்கு, ஒரு பத்தியை/சில பத்திகளைப் படிக்கவேண்டும், உரையை(உரைகளை)க் கருத்தில் கொண்டு ஒரு தூண்டல் அல்லது பணிக்குப் பதிலளிக்கவேண்டும் என்று T D W பொருள் கோருகிறது.
- 3 முதல் 8ஆம் வகுப்புகளுக்கான கணிதத் தேர்வில் SR உருப்படிகள், பலவற்றைத் தேர்ந்தெடுக்கும் (MS) உருப்படிகள் மற்றும் TE உருப்படிகள் உள்ளன. TE உருப்படிகளில் இழுத்தல் மற்றும் விடுதல், சுடுபகுதி, கீழ்தோன்றும் பட்டியல், பொருத்துதல், வரைபட உள்ளீடு மற்றும் விசைப்பலகை (பதிலைத் தட்டச்சு செய்தல்) ஆகியவை அடங்கும்.
- அறிவியல் தேர்வில் SR, EBSR மற்றும் TE உருப்படி வகைகள் உள்ளன: இழுத்தல் மற்றும் விடுதல், சுடுபகுதி (தேர்ந்தெடுக்கக் கிளிக் செய்தல்), பொருத்தும் ஊடாடல் (அளவுகோலின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கக் கிளிக் செய்தல்) மற்றும் உரையைச் சுட்டிக்காட்டுதல் ஆகியவை உள்ளன. கட்டமைக்கப்பட்ட பதில் உருப்படிகள், பட்டை வரைபடம் (வரைபடத்தில் பட்டைகளை உருவாக்கக் கிளிக் செய்தல்), எண் பதில் மற்றும் கீழ்தோன்றும் பட்டியல் ஆகும். தேர்வுகளில் ஒரு படம், வரைபடம், ஓவியம் போன்றவற்றையும் தொடர்புடைய மூன்று கேள்விகளையும் கொண்ட பத்திகளைக் கொண்ட தூண்டுதல் தொகுப்புகளும் அடங்கும்.



SOUTH CAROLINA STATE DEPARTMENT OF EDUCATION
DATA RECOGNITION DRC CORPORATION

# மாதிரிக் கேள்விகள்

## ஆங்கில மொழி கலை

ஒரு மாணவருடைய கட்டுரையின் வரைவைப் படிக்கவும்.

உயிரியல் பூங்காக் காவலர்கள் தங்கள் நாட்களை விலங்குகளுடன் செலவிடுகிறார்கள். விலங்குகள் எதை அதிகம் விரும்புகின்றன, அவற்றை எவ்வாறு பராமரிப்பது என்பதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். மனிதர்கள் மற்றும் விலங்குகள் பல சிறப்பு உறவுகளை உருவாக்குகின்றனர். விலங்குகள் வளர்வதையும் காலப்போக்கில் மாறுவதையும் உயிரியல் பூங்காக் காவலர்களால் பார்க்க முடிகிறது. சில சமயங்களில், உயிரியல் பூங்காவில் பிறக்கும் குட்டி விலங்குகளுக்கு உணவளித்து பராமரிக்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. அதை விட வேடிக்கையானதும் உற்சாகமானதும் என்ன இருக்க முடியும்?


எந்த வாக்கியம் இந்தப் பத்திக்கு **சிறந்த** அறிமுகத்தை அளிக்கும்?

**A.** இந்தக் கோடையில் எனது குடும்பத்துடன் உயிரியல் பூங்காவிற்குச் செல்வேன் என்று நம்புகிறேன்.
**B.** கரடிகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகள் பல உயிரியல் பூங்காக்களில் காணப்படுகின்றன.
**C.** உயிரியல் பூங்காவில் வேலை செய்வது சிறந்த வேலை என்று நான் நினைக்கிறேன்.
**D.** உலகெங்கிலும் உள்ள நகரங்களில் நூற்றுக்கணக்கான உயிரியல் பூங்காக்கள் உள்ளன.

**கீ = C**

## கணிதம்

படம் ஒரு பிரிட்ஜ் ஆதரவு, கேபிள் மற்றும் ஒரு பிரிட்ஜின் சாலையைக் காட்டுகிறது.




பிரிட்ஜின் ஆதரவு 80 அடி உயரம் உள்ளது. கேபிளின் நீளம் 170 அடி. பிரிட்ஜின் ஆதரவுடைய அடிப்பகுதியில் இருந்து கேபிள் சாலையை இணைக்கும் இடம் வரையில் உள்ள தூரத்தின் அடிக்கணக்கு என்ன?

**A.** 90
**B.** 150
**C.** 190
**D.** 250


**கீ = B**


## அறிவியல் — 4 ஆம் வகுப்பு

**இந்தக் கேள்விக்கு இரு பகுதிகள் உள்ளன.**

சிலர் பறவைகள் கூடுவதைத் தடுக்க விரும்பும் இடங்களில் பெரிய பிளாஸ்டிக் ஆந்தைகளை வைப்பதாக ஒரு மாணவர் படிக்கிறார்.

அந்த மாணவர் ஒரு ஆய்வை நடத்த முடிவு செய்தார். மூன்று வாரங்களாக பிளாஸ்டிக் ஆந்தை பயன்படுத்தப்படாத ஒரு பகுதியில் இருந்த பறவைகளின் எண்ணிக்கையை மாணவர் கணக்கிட்டார். அடுத்த மூன்று வாரங்களுக்கு அதே பகுதியில் பிளாஸ்டிக் ஆந்தை பயன்படுத்தப்படும்போது அங்கு இருந்த பறவைகளின் எண்ணிக்கையை மாணவர் கணக்கிட்டார்.




**பகுதி A:** மாணவர் கண்காணித்தவற்றை எந்த அறிக்கை **பெரும்பாலும்** விளக்குகிறது?

**A.** இதர பறவைகள் ஆந்தைகளைத் தவிர்க்கின்றன.
**B.** ஆந்தைகள் இதர பறவைகளைத் தவிர்க்கின்றன.


**பகுதி B:** பகுதி A இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிலை எந்தத் தரவு **நன்கு** ஆதரிக்கிறது?

**A.** பிளாஸ்டிக் ஆந்தையைப் பயன்படுத்தியபோது அதிக பறவைகள் காணப்பட்டன.
**B.** பிளாஸ்டிக் ஆந்தையைப் பயன்படுத்தியபோது சில பறவைகளே காணப்பட்டன.

**கீ = A/B**

## அறிவியல் — 6 ஆம் வகுப்பு

*குளோஸ்ஸோப்டெரிஸ்* ஒரு ஃபெர்ன் இனத்தைச் சார்ந்ததாகும். *மீசோசாரஸ்* மற்றும் *சைனோக்நாத்தஸ்* பண்டைய ஊர்வன வகையைச் சேர்ந்தவையாகும். இந்த மூன்று உயிரினங்களின் புதைபடிவங்கள் எங்கு காணப்பட்டன என்பதை இந்த வரைபடம் காட்டுகிறது.




டெக்டோனிக்ஸ் தகடு கோட்பாட்டை ஆதரிக்க வரைபடத்திலிருந்து எந்த அறிக்கை **சிறந்த** முறையில் பயன்படுத்தப்படுகிறது?

**A.** ஒரு காலத்தில் நிலப்பரப்புகள் வெகு தொலைவில் இருந்ததையும், உயிரினங்கள் அவற்றுக்கிடையே நீண்ட தூரம் பயணித்ததையும் புதைபடிவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.
**B.** நிலப்பரப்புகள் ஒரு காலத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டு பின்னர் காலப்போக்கில் பிரிந்தன என்பதை புதைபடிவங்கள் குறிக்கின்றன.
**C.** உயிரினங்கள் புதைபடிவமாக மாறுவதற்கு முன்பு ஒரு நிலப்பரப்பில் இருந்து மற்றொரு நிலப்பகுதிக்கு நீந்திச் சென்றதை புதைபடிவங்கள் குறிக்கின்றன.
**D.** உயிரினங்கள் இரண்டு நிலப்பகுதிகளிலும் சுயாதீனமாக வளர்ந்ததாகவும், காலப்போக்கில் நிலப்பரப்புகள் தனித்தனியாக நகர்ந்ததால் அவற்றுக்குள் ஒற்றுமையைப் பேணுவதாகவும் புதைபடிவங்கள் குறிக்கின்றன.

**கீ = B**

# மாதிரிக் கேள்விகள், பயிற்சிகள் மற்றும் இணையக் கருவிகள் குறித்த பயிற்சி (OTT)

SC READY இணையப்பக்கம் (https://ed.sc.gov/tests/middle/sc-ready/) பயிற்சி, ஆயத்தமாதல் மற்றும் குறிப்பு ஆதாரங்களை வழங்குகிறது, இவற்றுள் பின்வருவன அடங்கும்:

- ஒவ்வொரு வகுப்பு மற்றும் பாடத்திற்கான தேர்வுக் கேள்விகளுக்கான மாதிரிகள்.
- இணையத் தேர்வின் காணொளிப் பயிற்சி, இதில் இணையத் தேர்வு முறையை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த படிப்படியான வழிமுறைகள். பள்ளிகள் தேர்விற்கு முன்னதாக மாணவர்களுடன் இந்தப் பயிற்சிகளை மீளாய்வு செய்ய வேண்டும்.
- இணையக் கருவிகள் குறித்த பயிற்சி (OTT) (https://portal.te.drcedirect.com/SC) என்கிற கணினித் தொகுதி தேர்வுச் சூழலை உருவகப்படுத்துகிறது மற்றும் மாணவர்கள் தேர்வு மென்பொருள் மற்றும் தேர்வின்போது கிடைக்கும் சுட்டிக்காட்டுவான், பெரிதாக்குவான் மற்றும் கணக்கிடும் கருவி போன்ற கருவிகளைப் பயன்படுத்திப் பயிற்சி செய்ய அனுமதிக்கிறது.

# தேர்வு முடிவுகள்

- ஜூலை 15ஆம் தேதிக்குள் மாவட்டங்கள் தனிப்பட்ட மாணவர் அறிக்கைகளின் (ISRகள்) மின்னணு நகல்களைப் பெறும். ஜூலை 30ஆம் தேதிக்குள் மாவட்டங்கள் பெற்றோருக்கு விநியோகிப்பதற்கான காகித நகல்களைப் பெறும்.
- ஒவ்வொரு தேர்விற்கும் மாணவர் முடிவுகள் அளவுகோல் மதிப்பெண்கள், செயல்திறன் நிலைகள் (விஞ்சுகிறார், எட்டுகிறார், அணுகுகிறார் அல்லது எட்டவில்லை) மற்றும் அறிக்கையிடல் வகையின்படியான செயல்திறன் (குறைவு, நடுத்தரம், அல்லது அதிகம்) ஆகிய வடிவங்களில் அறிவிக்கப்படும்.